இயக்குநர்(பொ) தமிழ்நாடு மோட்டார் வாகன பராமரிப்புத்துறை, சென்னை-42
அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை: திரு. கொ. செந்தில்வேல், B.E.,

செ.மு.ஆணை எண் அ2/ 7667 / 2019 நாள் 03.07.2019

பொருள் - பணியமைப்பு - மோ.வா.ப.துறை - இத்துறையின் சிவகங்கை, அரசு தானியங்கி பணிமனையில் தேர்வுநிலை பொருத்துநராக பணிபுரிந்து பணியிலிருக்கும்போது 20.11.2005ல் மறைந்த திரு. N. ராஜசேகரன், என்பவரது மகனான திரு. ரா. நாகராஜன், என்பவருக்கு கருணையடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் வழங்கியது - இளநிலை உதவியாளர் பதவியில் அன்னாரது பணியினை வரன்முறைப்படுத்தி ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை

1. அரசாணை(நிலை) எண். 560 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை,
   நாள் 03.08.1977
2. அரசாணை(நிலை) எண். 73 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை,
   நாள் 26.10.1983
3. அரசாணை(நிலை) எண். 61 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை,
   நாள் 19.07.2016
4. அரசாணை எண். 155 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத்(Q1) துறை, நாள் 10.12.2014
5. அரசாணை எண். 80 தொழில் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 02.03.2016
6. அரசாணை எண் 100 பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 1.8.2018
7. இயக்குநரின் செயல்முறை ஆணை எண் அ2/ 11456 / 2006 நாள் 18.07.2018
8. பொது மேலாளர், அ.ம.தா.ப., சென்னை அவர்களது கடித எண் அ1/2730/2018
   நாள் 26.06.2019.

.........

பார்வை 1 முதல் 6 வரையான அரசாணைகளின் படி பார்வை 7ல்காணும் இயக்குநரது செயல்முறைகள் வாயிலாக இத்துறையின் சிவகங்கை, அரசு தானியங்கி பணிமனையில் தேர்வுநிலை பொருத்துநராக பணிபுரிந்து பணியிலிருக்கும்போது 20.11.2005ல் மறைந்த திரு. N. ராஜசேகரன், என்பவரது மகனான திரு. ரா. நாகராஜன், என்பவரை, இத்துறையின் சென்னை, அரசு மத்திய தானியங்கி பணிமனையில் கருணையடிப்படையில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்து ஆணைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து திரு. ரா. நாகராஜன், இத்துறையில், 23.07.2018 முற்பகல் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்துள்ளார்.

பார்வை 4ல் காணும் அரசாணையில் வழங்கப்பட்ட ஆணைகளின்படியும், பார்வை 5 மற்றும் 6ல் காணும் அரசாணைகள் வாயிலாக அரசுப்பணியாளர் தேர்வாணையத்திற்குட்பட்ட பதவிகளில் கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்ட நபர்களது பணியினை அந்தந்த துறைத்தலைவர்களே பணிவரன்முறை செய்ய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்தும், பார்வை 8ல் காணும் சென்னை, அரசு மத்திய தானியங்கி பணிமனை, பொதுமேலாளரின் பிரேரணையைத் தொடர்ந்தும், திரு. ரா. நாகராஜன், என்பவர் கருணையடிப்படையிலான பணிநியமனத்திற்கு தேவையான அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்துள்ளதாலும் இளநிலை உதவியாளர் பதவிக்குண்டான விதிகளின் தேவைகளை பெற்றுள்ளதாலும் அன்னாரது பணியினை இளநிலை உதவியாளர் பதவியில் அன்னார் அப்பதவியில் சேர்ந்த நாளான 23.07.2018 முற்பகல் முதல் முறைப்படுத்தப்பட்டு அந்நாள் முதல் அவர் இரண்டாண்டு அலுவல் காலத்திற்கு தகுதிகாண் பருவத்தில் இருப்பார் என்றும் அவ்வாறான தகுதிகாண் பருவ காலத்தை அன்னார் முறைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்க வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

(ஒம்.) K. செந்தில்வேல்
இயக்குநர்(பொ)

இணைப்பு : மேற்படி நபரது பணிப்பதிவேடு(One Bound Register of two vols.)

பெறுநர்
திரு. ரா. நாகராஜன், இளநிலை உதவியாளர், அரசு மத்திய தானியங்கி பணிமனை, சென்னை-42
(உரிய வழிமுறையாக)

நகல்
பொதுமேலாளர், அரசு மத்திய தானியங்கிப் பணிமனை, சென்னை-42
(தனியரது பணிப்பதிவேடு இத்துடன் இணைத்து அனுப்பப்படுவதுடன் அதனை பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகையை உடன் அனுப்பி வைக்குமாறு கோரப்படுகிறது.)

அ2.இ.கோ.

/ ஆணைப்படி /

துணை இயக்குநர் (நிர்வாகம்)